# DEPOSITION OF WITNESS

**In the Court of District Munsif cum Judicial Magistrate , Srirangam**

**CC.517/2019**

**PW-5**

**Date :-07.07.2026**

| | | | |
|---|---|---|---|
| Name | திரு. முத்துக்குமார் | Caste | |
| த/பெ. | திரு. நாகசுந்தரம் | Calling | காவல் ஆய்வாளர் |
| Village | SP பட்டினம் | Religion | |
| Taluk | இராமநாதபுரம் | Age | 52 /2026 |

**அரசு தரப்பு முதல் விசாரணை-**

நான் தற்போது இராமநாதபுரம் மாவட்டம் SP பட்டினம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன் . இந்த வழக்கின் பட்டியல் சாட்சி 12 செல்வராஜ் உதவி ஆய்வாளர் மற்றும் லதா காவல் ஆய்வாளர் ஆகியோர்கள் தற்போது பணிமாறுதலில் வேறு ஊருக்கு சென்றுவிட்டதாலும் நீதியின் நலன்கருதி காலதாமதத்தை தவிர்க்கும் பொருட்டு நீதிமன்ற அனுமதியின் பேரில் அவர்களுடைய கையொப்பம் எனக்கு நன்கு தெரியும் என்பதால் வழக்கு கோப்பை பார்த்து அவர்களுக்காகவும் நான் சாட்சியம் அளிக்கிறேன் . கடந்த 02.06.2014ம் தேதி ஜீயபுரம் வட்ட காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வந்தபோது பெட்டவாய்த்தலை காவல் நிலைய உதவி ஆய்வாளர் செல்வராஜ் என்பவ்ர் பெட்டவாய்ததலை காவல்நிலையத்தில் நிலை ய பொறுப்பில் இருந்தபோது சிறுகமணி கிராமநிர்வாக அலுவலர் விஜயலெட்சுமி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று

நிலைய குற்ற எண். 120/2014 சட்டப்பிரிவுகள் 279, 337 இதசவின் கீழ் பதிவு செய்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார் . **அந்த முதல் தகவல் அறிக்கை அ .சா.ஆ.3 ஆக குறியிடுசெய்யப்படுகிது.** பின்னர் இந்த

வழக்கினை அவர் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 25.06.2014 அன்று காலை 16.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள்தமிழவாணன் , மலையாளன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார் . **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4 ஆக குறியிடுசெய்யப்படுகிறது.** பின்னர் சாட்சிகள் , விஜயலெட்சுமி, ரவிச்சந்திரன், செல்வம், தமிழ்வானன், மலையாளம் ஆகியோர்களை தனிதனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். இத்துடன்அவர்தனது விசாரணையைமுடித்துவழக்கு கோப்பினை என்னிடம் ஒப்படைத்தார் . பின்னர் நான் எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடம் சென்று பார்வையிட்டு சாட்சிகளை விசாரணை செய்தபோது அவர்கள் உதவி ஆய்வாளரிடம் சொன்ன வாக்குமூலத்தை என்னிடம் சொன்னதால் நான் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை . பின்னர் திருச்சி அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த வழக்கின் விபத்து சம்பவத்தில் காயம்பட்ட 30 வயது மதிக்கதக்க பெண் ஒருவர் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார் என்ற தகவலை பெற்று வழக்கின் சட்டப்பிரிவுகளை 279, 337 இதசவிலிருந்து 279, 304(A) இதசவாக மாற்றம் செய்து சட்டபிரிவு மாறுதல் அறிக்கை நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன் . **சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.5 ஆக குறியிடுசெய்யப்படுகிறது.** 10.06.2014 அன்று பகல் 12 மணி முதல் 14 மணிவரை இறந்துபோன 30 வயதுமதிக்கதக்க அடையாளம் தெரியாத பெண் பிரேதத்தின் மீது திருச்சி அரசு மருத்துவமனை சவங்கிடங்கில் வைத்து சாட்சிகள் மற்றும் பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் பிரேத விசாரணை மேற்கொண்டு பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தேன் . பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.6 ஆக குறியிடுசெய்யப்படுகிறது. பின்பு காவலர் ஜெயமுருகன்

இறந்தஅடையாளம் தெரியாத 30 வயது மதிக்கதக்க பெண்னின் பிரேதத்தை பிரேத பரிசோதனைக்கா மருத்துவரிடம் அனுப்பிவைத்தேன் . பின்னர் விபத்து ஏற்படுத்திய வாகனமான TN-47 AY-3324 என்ற பதிவு எண் கொண்ட சைய்லோ காரை ஆய்விற்காக மோட்டார் வாகன ஆய்வுக்கு அனுப்பிவைத்தேன். அந்த வாகனத்தை ஆய்வு செய்த செந்தில்குமார் மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து வாகன ஆய்வு அறிக்கை பெறப்பட்டது . வாகன ஆய்வுஅறிக்கை அ .சா-ஆ.7 ஆக குறியிடுசெய்யப்படுகிறது. பின்னர் சாட்சிகள் ரெங்கராஜ், முத்துசாமி, வையாபுரி ஆகீயோர்களை தனிதனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன் . இத்துடன் எனது விசாரணையை முடித்து மேல் விசாரணைக்காக வழக்கு கோப்பினை காவல் ஆய்வாளர் லதா அவர்களிடம் ஒப்படைத்தேன் . அவர் இந்த வழக்கினைதனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு விபத்து சம்பவத்தில் இறந்துபோன அடையாளம் தெரியாது 30 வயது மதிக்கதக்க பெண்னின் பிரேதத்தை பரிசோதனை செய்த திருச்சி அரசு மருத்துவமனை மருத்தவர் சரவணன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து பிரேத பரிசோதனை அறிக்கை பெற்றுள்ளார் . அந்த பிரேத பரிசோதனை அறிக்கை அ .சா.ஆ-8 ஆக குறியிடுசெய்யப்படுகிறது. பின்னர் காவலர் வேல்முருகன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு ெசெய்துள்ளார். இத்துடன் அவர் தனது விசாரணையை முடித்து எதிரி மீது 279, 304(A) இதசவின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை-

முதல் தகவல் அறிக்கை 02.6.2014 அன்று பதிவு செய்யப்பட்டு 04.06.2014 அன்று நீதிமன்றத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டது என்றால்

**சரிதான். முதல் தகவல் அறிக்கையிலோ, வாக்குமூலத்திலோ வண்டியின் நிறம் பற்றி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். சரிவர புலன் விசாரணை செய்யாமலும், சாட்சிகளை விசாரணை செய்யாமலும் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இறந்து நபரின் அஜாக்கிரதையால்தான் இந்த விபத்தானது ஏற்பட்டது என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரில்ல.**

Sd/-xxxx

Taken down by me in open court , read over to his and accepted by him as correct and made his signature

Sd/-K.Vijai Rajesh.,
District Munsif – Cum - Judicial Magistrate,
***Srirangam.***